RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s316

OPEN ACCESS

# புதின இலக்கியம் காட்டும் திருநங்கைகளின் சமூக மாற்றம்

சி. இராகினி [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா.

# Social Change in Transgender People as Shown in the Novel

S. Rahini [a, *]

[a] Department of Tamil, Chellammal women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: rahini.ma.2016@gmail.com

Received: 19-04-2021
Revised: 20-04-2022
Accepted: 26-05-2022
Published: 16-07-2022

Check for updates

**ABSTRACT**

Literature is also a medium through which the diverse lifestyles of human society have been fully and partially recorded from the earliest times. In the early literatures the main characters were men from the upper class of the society. The early literatures recorded the marginalized people of lower strata but their lifestyle and social changes were not recorded, rather the literature showed such people in the light of being ridiculed and enslaved by the upper class. In the course of time, literature also had changes as many literary works evolved to shed light on the different sections of society and also the marginalized people. The novels titled Vaadamalli, Moondram Paalin Mugam, Punitham Thedum Puthinam figures transgenders as the protagonist who are also a marginalized section of the society. The essence of this dissertation is to illustrate the social changes in the lives of transgenders such as being accepted by parents and the community, continuing education without lagging, being employed, getting police assistance, and participating in multidisciplinary ways through the novels.

**Keywords:** Transgender, Social Changes, Marginalized People, Community

## முன்னுரை

தமிழின் முதல் புதினம் தோன்றி தற்காலம் வரையில் சமூகத்தின் எண்ணற்ற பாடுபொருட்களைப் புதின இலக்கியம் பதிவுச் செய்து வருகிறது. ஆரம்பகால புதினங்களில் உயர் சமூகத்தைச் சார்ந்த மனிதர்களின் பிரச்சினைகளை அல்லது அவர்களுடைய ஆற்றல்களைக் கூறும் விதமாகவே பாடுபொருளும், அவர்களே முதன்மை கதாப்பாத்திரங்களாகவும், அவர்களுடைய வழக்கு மொழியே மொழி நடையாகவும் இருந்து வந்தது. ஆனால் காலம் மாற மாற ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்ப பாடுபொருளிலும், கதைமாந்தர்களாலும், மொழிநடையாலும் புதின இலக்கியம் மாற்றத்தைக் கண்டுள்ளது. அதன்வழி 1990 களுக்குப் பின் புதின இலக்கியம் தலித்தியம், பெண்ணியம், விளிம்புநிலை மக்களின் வாழ்வியல் ஆகியவற்றைப் பதிவு செய்யும் வண்ணம் பல படைப்புகளைத் தந்துள்ளது. இவற்றுள்ளும் விளிம்புநிலை மக்களாகிய திருநங்கைகளின் வாழ்வியல் முறைகளைப் பதிவுச் செய்துள்ள புதினங்களில் இருந்து திருநங்கைகளுக்கான சமூக மாற்றமாக எவற்றை அடையலாம் காணலாம் என்பதை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திருநங்கைகளின் வாழ்வியல்

திருநங்கையாக மாறிய ஒருவரின் வாழ்நிலை பிறப்பு முதல் இறப்பு வரை போராட்டம் நிறைந்ததாகவே காணப்படுகிறது. அதன் வழி பிறந்தது முதல் பின் வளர்ந்து ஒரு குறிப்பிட்ட பருவ

வயதை அடையும் போது உடலாலும் மன உணர்வுகளும் மாற்றத்தைக் காணுகின்றனர். அந்த உணர்வு நிலைகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற துடிப்பும் அவர்களிடம் உள்ளது. ஆனால் அவ்வாறு வெளிபடுத்தினால் குடும்பமும் சமூகமும் என்ன நினைக்கும் என்ற அச்சமும் காணப்படுகிறது. அந்நிலையில் உணர்வுகளை வெளிக்காட்டாமல் அடக்கியும் அல்லது யாருக்கும் தெரியாமல் மறைவாகத் தங்களுடைய உணர்வு நிலைகளை வெளிக் காட்டியும் இருக்கக் கூடியதாக திருநங்கைகளின் ஆரம்ப நிலை அமைகிறது. ஆனால் எவ்வளவு நாட்களுக்கு அவர்களால் அவர்களை மறைத்துக் கொண்டு வாழ முடியும் என்ற நிலையில் பெண்மைத்தன்மை கொண்ட மாற்றங்கள் வெளிப்படும்போது குடும்பத்தாலும் சமூகத்தாலும் கேலி, கிண்டல், அடி, உதை, அவமானங்கள் என பலக் கொடுமைகளைச் சந்தித்து வீட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலையை அடைகின்றனர்.

அதனால் அவர்களுடைய கல்வி நிலை பாதியிலே நிறுத்தப்படுகிறது. அதன் விளைவு பிழைப்பிற்காக தவறான வழிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். உடல்ரீதியாகவும் முழுமையானப் பெண்ணாக மாறுவதற்காகவும் மிகவும் வலி, வேதனை நிறைந்த அறுவை சிகிச்சையின் மூலம் தங்கள் பிறப்புறுப்புகளை அகற்றுவதும், சடங்கு என்ற முறையில் ஒரு நாள் திருமணம் மறுநாள் விதவை என்று வாழ்நாள் முழுவதும் துயரம் நிறைந்த நிலையிலேயே திருநங்கைகளின் வாழ்க்கைச் சூழல் சென்று கொண்டிருக்கிறது. இத்தகு வாழ்க்கைச் சூழலை மாற்றும் விதமாக சமூக ஊடகமான இலக்கியம் இம்மக்களுக்காக தன் எழுத்தின் மூலம் சொல்லியுள்ள மாற்றங்களை புதின இலக்கியத்தின் மூலம் காண்போம்

## புதினங்களில் திருநங்கைகள்

தமிழ்ப் புதினங்களைப் பொறுத்தவரையில் திருநங்கைகள் குறித்த பதிவுகள் மிகக் குறைவே. அவ்வகையில் திருநங்கைகள் குறித்து வெளியான புதினங்கள் எவை என்று ஆராய்கையில் முதன்மையாக நான்கு புதினங்கள் கிடைக்கின்றன. அவை வாடாமல்லி, மூன்றாம் பாலின் முகம், அவன் அது அவள், புனிதம் தேடும் புதினம். இந்நான்கு புதினங்களும் திருநங்கைகளின் வாழ்வியலை சித்திரிக்கின்றன. திருநங்கைகள் அரசர்களின் ஆலோசகர்களாகவும், காப்பாளர்களாகவும் பணியாற்றிய வரலாற்று நிகழ்வுகளை எஸ். இராமகிருஷ்ணன் படைத்த இடக்கை புதினம் பதிவு செய்கிறது. இவற்றுள் வாடாமல்லி என்ற புதினமே திருநங்கைகள் குறித்து வெளியான முதல் புதினம். இப்புதினம் சு. சமுத்திரம் அவர்களால் 1994 ஆம் ஆண்டு படைக்கப்பட்டது. அதோடு பிரியா பாபு என்ற திருநங்கையால் படைக்கப்பட்ட முதல் புதினமாக மூன்றாம் பாலின் முகம் என்ற புதினம் சிறப்பு பெறுகிறது. சு. சமுத்திரத்தின் வாடாமல்லி என்ற புதினமும் அதனைத் தொடர்ந்து திருநங்கைகள் குறித்து வெளியான புதினங்கள் அனைத்தும் திருநங்கைகளின் வேதனை நிறைந்த வாழ்வியலோடு அவர்களுக்கான சமுதாய மாற்றத்தை நோக்கி செல்வதாகவே அமைந்துள்ளன.

அவ்வழி அம்மாற்றத்திற்கு வித்திடும் திருநங்கை கதாப்பாத்திரங்களாக வாடாமல்லியில் சுயம்பு என்ற மேகலை, மூன்றாம் பாலின் முகம் புதினத்தில் ரமேஷ் என்ற பாரதி, புனிதம் தேடும் புதினம் என்ற புதினத்தில் சொற்கோடன் என்ற சிறுநகை ஆகிய மூன்று திருநங்கை கதாப்பாத்திரங்களும் தங்கள் சமூகத்தின் நிலை கண்டு அதை மாற்றத் துடிக்கும் புரட்சித் திருநங்கைகளாகவே படைக்கப்பட்டுள்ளனர். ஆதலால் இவர்களின் வழி திருநங்கைகள் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள மாற்றங்களாக புதின இலக்கியம் எவற்றைப் பதிவு செய்துள்ளன என்பதை இனி அறியலாம்.

## பெற்றோர்களால் ஏற்றுக் கொள்ளப்படுதல், புரிந்துகொள்ளப்படுதல்

திருநங்கைகள் குறித்து வெளியான புதினங்களில், திருநங்கையாக தன் மகன் மாறிய நிலையில் ஆரம்பத்தில் அதனை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாக பெற்றோர்கள் காட்டப்பட்டாலும், பின் ஒவ்வொரு பெற்றோரும் ஏதோ ஒரு சூழலில் தன் மகனை புரிந்துகொண்டு ஏற்றுக் கொள்வதாகவே பதிவுகள் அமைகின்றன. வாடாமல்லி நாவலில் ஆரம்பத்தில் தன் மகன் பெண் போல் மாறியதற்கு பேய் தான் அவனைப் பிடித்து ஆட்டி வைக்கிறது, அதனால்தான் அவன் இப்படி நடந்து கொள்கிறான்

என்ற மூட நம்பிக்கை கொண்ட பெற்றோர்கள் பின் மருத்துவர் ஒருவர் இது பற்றி விளக்கி கூறியதும் தன் பிள்ளையை நினைத்து வருந்தியவர்களாகவும், அவனை ஏற்றுக் கொள்பவராகவுமே காட்டப்படுகின்றனர். இதனை,

“நாங்களும் ஒன்ன படாதபாடு படுத்திட்டோம். அப்புறம் டாக்டருக்கு படிக்கிற பையன் டேவிட் சொன்னப்புறம்தான் எனக்கே புரிஞ்சுது. நீ தனிப் பிறவியாம். நீ போன வேகத்துலய சேலையக் கட்டிட்டு வந்திருந்தாக் கூட சேர்த்திருப்பேன். நீ எந்த திசையில போனேன்னு கூட தெரியாம போச்சே ஒரு லெட்டர் போட கூடாதாடா?” (Samuthiram, 1994).

என்ற தந்தையின் கூற்று இது. இதே போல் மூன்றாம் பாலின் முகம் என்ற புதினத்திலும் தன் மகன் சேலையைக் கட்டிக்கொண்டு பெண் நெளிவுகளுடன் கண்ட தாய் ஆரம்பத்தில் அவனிடம் அன்பான முறையிலே அவனுக்கு இவற்றையெல்லாம் விட்டுவிடு இதனால் நம் குடும்ப மானம் கெட்டு விடும் என்று அறிவுறுத்துகிறார். பின் சமூக சேவகி ஒருவர் மூலம் திருநங்கைகள் பற்றி அறிந்ததும் தன் மகனின் உணர்வு நிலைகளைப் புரிந்து ஏற்றுக் கொள்பவராகவே படைக்கப்பட்டுள்ளார். இதனை,

“அடுத்தடுத்த நாட்களில் பார்வதியும் மெல்ல மெல்ல ரமேஷின் உணர்வுகளை புரிந்து கொள்ள துவங்கினாள். அவனுக்கு உறுதியாக இருக்க வேண்டும் என உறுதி பூண்டாள். வீம்பாய் இருந்து பிள்ளையை இழப்பதை விட அவனுக்கு அவன் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற தாயாய் இருப்பதில் தப்பில்லை என எண்ணினாள்.” என்பது ஒரு தாயின் எண்ணமாகப் பதிவு செய்யப்படுகிறது (Priya Babu, 2008).

புனிதம் தேடும் புதினம் என்ற புதினத்திலும் மகனின் மாற்றத்தை அறிந்த பெற்றோர்கள் அவனை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருந்த நிலையிலும் பெற்றோருக்குத் தன்னால் அவமானம் நேருமோ என்ற பயத்தால் வீட்டை விட்டு வெளியேறுகிறான் சொற்கோடன். ஆனால் அவனின் பெற்றோர்கள் அவனைத் தேடி தேடி அலைபவர்களாகவும் மகனின் பிரிவைத் தாங்க முடியாதவர்களாகவும் மகன் எந்நிலையில் இருந்தாலும் ஏற்றுக் கொள்பவராகவே காட்டப்படுகின்றனர். இதனை,

“ஒரு நாள் சொற்கோடன் தமது மேனியில் மற்ற ஆண்களைப் போல இல்லாமல் ஏதோ மாற்றம் இருக்கிறது. பள்ளியில் ஏனையோர் சாடுகிறார்கள். ஏனென்று தெரியவில்லை என்றவாறு கரைந்தான். நானும் சிலரிடம் இது பற்றிக் கேட்டறிந்தேன். அவர்களின் சொல்லாடலில் எமது மகனின் பிறப்பே பிழையாகிக்கொண்டு இருப்பதை அறிந்தோம். மன வேதனையை மகனிடம் காட்டாமல் பொருத்திருந்தோம். ஆனால் அதற்குள் அவனே புறம் இறங்கிவிட்டான். எங்கெல்லாமோ தேடியலைந்தோம் இன்றுவரை திரிகின்றோம். இதுவரை விடை இல்லை. உயிர்ப்புடன் தான் இருப்பான் எனும் நம்பிக்கையில் தான் நாங்கள் வேறிடத்திற்குச் செல்லவில்லை. என்றாவது அவன் வரும் போது நாங்கள் இருக்க வேண்டும் அல்லவா! அவன் வருவான். கண்களில் நீர் கசிந்த படி கரங்களால் துடைத்துக் கொண்டான் (Gowthaman Neelraj, 2020).”

என்பது மகனைத் தொலைத்த பெற்றோரின் கண்ணீர் சிந்தும் வரிகள். மேற்கண்ட பதிவுகளின் வழி திருநங்கைகள் குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அவர்கள் வாழ்வே கேள்விக்குறிதான் என்ற நிலையில் தவறான பாதைக்கு செல்லுகின்றனர். அதன் விளைவு பாலியல் தொழிலில் ஈடுபடுதல், பிறரிடம் பிச்சை எடுத்தல் போன்ற இழி தொழிலுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இந்நிலையை மாற்றும் விதமாக பெற்றோர் அவர்களைப் புரிந்து கொள்கின்றனர், ஏற்றுக் கொள்கின்றனர் என்ற மாற்றம் ஏற்படின் அவர்கள் வாழ்வு சிறக்கும் என்ற சமூக மாற்றப் பதிவுகளாக இவற்றை நாம் ஏற்கலாம்.

## கல்வியில் இடையீடு ஏற்படாமை

ஒரு மனிதனுக்கு இச்சமூகத்தில் தனக்கான ஒரு வாழ்வாதாரத்தை உருவாக்கிக் கொள்வதற்கும், சமூகத்தில் தன்னை மேம்படுத்திக் கொள்வதற்கும் கல்வி இன்றியமையாதது. அத்தகு கல்வியை திருநங்கைகள் ஆரம்பநிலையில் கற்கும் போது தங்கள் உடல் மற்றும் மன உணர்வு நிலைகள் மாறி

வரும் சூழலில் உடன் பயிலும் மாணவர்கள் மற்றும் பிறரின் கேலி, கிண்டல் பேச்சுக்கும், அவமானத்திற்கும் பயந்து கற்பதில்லை. அதனால் அவர்களின் கல்வி இடையூறு ஏற்பட்டு படிக்க முடியாத சூழல் ஏற்படுகிறது. ஆனால் அத்தகு நிலைகளையெல்லாம் கடந்து ஏளனத்திற்கும், கேலிக்கும் பயப்படாமல் தைரியத்துடன் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு கல்வியைத் தொடர வேண்டும். அதன்வழி நல்லதொரு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற மன உறுதி கொண்ட திருநங்கையாக, பிறருக்கு முன்னுதாரணமாக திகழக்கூடிய திருநங்கையாக புதினத்தில் மேகலை, பாரதி, சிறுநகை கதாபாத்திரங்கள் அமைவது திருநங்கைகள் கல்வியை இடைவிடாது கற்க வேண்டும் என்ற நல்லதொரு சமூக மாற்றமாக புதினத்தில் பதிவு செய்யப்படுகிறது. புதினத்தின் வழி இதனை ஆசிரியர்

"நீ நினைக்குற மாதிரி என்னோட வாழ்க்கை இருக்காது. முதல்ல படிப்ப முடிக்கணும். அப்புறம் முழுசா அரவாணியா வெளியில வந்து நிறைய சாதிக்கணும். எழுதணும். அரவாணிகளை பற்றி நிறைய எழுதணும்…………... படிச்ச அரவாணிகளை ஒன்றாத் திரட்டி வேலை செய்ய வைக்கணும்" (Priya Babu, 2008).

"நாளடைவில் பெண்ணாகவே வலம் வந்தவள் பதின்ம வயதை எட்டும் போதே வளமான உடல் வாகுடன் பாடசாலைக் கல்வியை முடித்தாள். பிறகு பட்டப் படிப்பினையும் முதுவள நாட்டின் அரசு கல்வி கழகத்திலேயே முடித்தாள். அரசு துறை சார்ந்த பல தேர்வுகளையும் அவ்வப்போது எழுதியும் வந்தாள்" (Gowthaman Neelraj, 2020).

போன்ற பதிவுகளின் வழி திருநங்கைகள் கல்வியை இடைவிடாது கற்று உயர் படிப்பும் அரசுத்துறை பணிகளையும் பெறவேண்டும் என்ற மாற்றத்தை ஏற்படுத்தும் வண்ணம் பாரதி, சிறுநகை கதாபாத்திரங்களின் வழி அறிவுறுத்தப்படுகிறது.

## வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுதல்

குடும்பத்தாலும் சமூகத்தாலும் ஒதுக்கப்பட்ட சூழலில், கல்வியும் இல்லாத நிலையில் திருநங்கைகள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக பிச்சை எடுத்தல், பாலியல் தொழிலில் ஈடுபடுதல் என்ற நிலையை மாற்றும் விதமாக அவர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்கும் வண்ணம் சுய உதவி குழுக்களும் சங்கங்களும் அமைக்கப்பட வேண்டும் என்பதானப் பதிவுகளும் இப்புதினங்களில் பதிவுச் செய்யப்படுகின்றன என்பதனை,

"ஜானகியம்மாள் ஏரியா அரவாணிகளை ஒருங்கிணைத்து "மாத்தா அரவாணிகள் சுய உதவிக்குழு" "மலர் அரவாணிகள் சுய உதவிக்குழு" என்ற பெயரில் இரண்டு அரவாணிகள் சுய உதவிக்குழுக்களை ஆரம்பித்து சேமிக்கக் கற்றுக் கொடுத்தாள். ஜானகியம்மாள் கூட போன வாரம் சொன்னாள். ஏதோ கடை கேக்குறது, தந்தான்னு இருந்தவங்கள திருத்தி மீட்டிங்கு, பயிற்சின்னு மாத்திட்டியே நீ நெனச்சத சாதிச்சிட்டப்பா என நெட்டி முறித்தாள்" (Priya Babu, 2008).

இது போன்ற பதிவுகள் சு. சமுத்திரத்தின் வாடாமல்லி நாவலிலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதன்வழி திருநங்கைகள் சமூகம் மெல்ல மெல்ல தங்களுக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதிலும் மாற்றத்தைக் கண்டு தங்களை புறக்கணித்தவர்களாலேயே மதிக்கப்பட்டு அவர்களுடனும் இணைந்து செயலாற்றும் திறனையும் பெறுகின்ற காலம் வந்து விட்டது என்பதனை,

"ஏரியாவில் உள்ள பெண்கள் சுய உதவிக்குழுவுடன் இணைந்து செயல்பட்டதால் அவர்களுக்கான மதிப்பும் உயர்ந்தது. மேலும் ஏரியாவில் தண்ணீர் பிரச்சனை, ரோடு பிரச்சனை, தாதா பிரச்சனை, கந்துவட்டி போன்றவற்றிற்காக பெண்களுடன் இணைந்து போராட துவங்கினர்" (Priya Babu, 2008).

என்பதானப் பதிவுகள் திருநங்கைகள் சமூகம் மிகச்சிறந்த ஒரு சமூக மாற்றத்தை நோக்கி செல்லவேண்டும் என்றதான சிந்தனையைப் பதிவு செய்துள்ளது.

## சமூகத்தால் ஆதரிக்கப்படுவது, அங்கீகரிக்கப்படுவது

திருநங்கையாக உருவெடுக்கும் அனைவர் வாழ்விலும் மிகப்பெரிய ஒரு பிரச்சனை பிறரால் நாம் புறக்கணிக்கப்படுகிறோமே, நம்மைப் புரிந்து கொண்டு ஆதரிப்பதற்கு, உதவி செய்வதற்கு யாரும் முன்வரவில்லையே என்ற ஏக்கமும், வருத்தமும் காணப்படும். இந்நிலையை மாற்றும் விதமாக வாடாமல்லி புதினத்தில் மூர்த்தி, மருத்துவ மாணவன் டேவிட், சுலோச்சனா, சுலோச்சனாவின் கணவன், சர்தார்ஜி ஆகிய கதாபாத்திரங்களும், மூன்றாம் பாலின் முகம் புதினத்தில் கண்மணி என்ற சமூக சேவகி, கண்மணியின் கணவன் அதேபோல் புனிதம் தேடும் புதினத்தில் பைம்பொழில் என்ற கதாபாத்திரமும் திருநங்கைகளின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்களாகவும், அவர்களை ஏற்றுக்கொண்டு உதவி செய்பவர்களாகவுமே படைக்கப்பட்டுள்ளனர். அந்நிலையைக் காட்சிப் படுத்தும் விதமாக மூன்றாம் பாலின் முகம் புதினத்தில் கண்மணி மற்றும் அவள் கணவனுடனான உரையாடல் இவ்விதம் அமைகிறது.

"ஏங்க அரவாணிகளைப் பத்தி என்ன நினைக்கிறீங்க? அப்பாவியாய் கேட்டாள்.

அவள் கேள்வியில் இருந்து குழந்தைத்தனம் கண்டு பகபகவென சிரித்தார் வாசுதேவன்.

என்னம்மா புதுசா கேக்குற என்றார் சிரிப்பை அடக்க முடியாமல்.

முதல்ல சொல்லுங்க என கெஞ்சினாள்.

ஓகே. ஓகே. இங்க பார் கண்மணி! இத நீ ஏன் கேக்குற அப்படிங்கறது எனக்குத் தெரியல. ஆனா அவங்க ரொம்ப பாவப்பட்டவங்க. நாம அன்பும் அரவணைப்பும் கொடுத்து நம்பள்ல ஒருத்தரா ஏத்துக்க வேண்டியவங்க" என்ற பதிவு சமூகமாக வாழும் நம் ஒவ்வொருவர் மனதிலும் இத்தகு மாற்றம் வர வேண்டும் என்பதனை உணர்த்துவதாக உள்ளது (Priya Babu, 2008).

## காவல் துறையின் உதவி கிட்டுதல்

திருநங்கையாக மாறிய ஒருவரைப் பற்றிய சமூகத்தின் கண்ணோட்டம் என்பது கேலிக்குரியதாகப் பார்க்கப்படுகிறது. மேலும் அவர்களை ஒரு அவமானச் சின்னமாகவும் கருதுகின்றனர். இத்தகு நிலையில் அவர்களுக்கு உடல் ரீதியாக வன்முறை நிகழும் போது அது குறித்து காவல்துறையிடம் தெரிவிக்கும் போது அதை ஒரு பெரிய பிரச்சனையாக காவல்துறை கண்டுகொள்வதில்லை. சில நேரங்களில் காவல் துறையினராலே கற்பழிப்பு நிகழ்வுகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர் என்ற சூழலும், செய்யப்படாத குற்றத்திற்காகப் பொய் வழக்கு போடப்பட்டு சிறைக்கு அனுப்புவதுமான நிகழ்வுகளை வாடாமல்லி, மூன்றாம் பாலின் முகம் ஆகிய இரு புதினங்களும் பதிவு செய்கின்றன. இந்நிலையிலிருந்து முற்றிலும் மாறிய வண்ணமாக 2020 ஆம் ஆண்டு வெளிவந்த புதினமான புனிதம் தேடும் புதினத்தில் திருநங்கைகளுக்குப் பிரச்சனை என்றால் அது குறித்து காவல்துறையில் தாங்களாகவே தைரியமாக சென்று புகார் அளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்ற மாற்றத்தை இந்நாவல் பதிவு செய்கிறது. இதனை,

"அவனது பார்வை வேறு கோணத்தில் தான் இருந்தது என அறிந்து தான் கூறினேன். காவல் நிலையம் வரை சென்று புகார் அளித்து விட்டு வருவதற்கு தாமதம் ஆகிவிட்டது வா போகலாம் என்றாள்" (Gowthaman Neelraj, 2020).

என்ற பதிவு திருநங்கைகளுக்குக் காவல்துறை உதவும் என்ற நம்பிக்கை வந்துள்ளது என்ற மாற்றத்தைக் காட்டுகிறது.

## பிறருக்கு உதவும் தன்மையை காட்டல்

நம்மில் பலர் திருநங்கைகளைப் பற்றி புரிந்து கொள்வதற்கும், உதவி செய்வதற்கும் முன்வரவில்லை என்றாலும் திருநங்கைகள் அவ்வாறு இல்லாமல் கேட்காமலே பலருக்கும் உதவுபவர்களாகவே புதினங்களில் பதிவு செய்யப்படுகின்றனர். திருநங்கைகள் அவர்கள் சமூகத்தைச்

சார்ந்தவர்களுக்கும் உதவுகின்றனர். அவர்கள் சமூகத்தைச் சாராதவர்களுக்கும் உதவுகின்றனர். இத்தகு உதவும் குணம் கொண்ட திருநங்கைகளாக மேகலை, பாரதி, சிறுநகை கதாப்பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. இதன் வழி திருநங்கைகள் குறித்த ஒரு பயமும், அவர்களிடம் பேசுவதற்கும் தயங்கும் சமூகத்திற்கு அவர்களும் பிறருக்கு உதவும் நல்லெண்ணம் கொண்ட மனிதர்கள் தான் என்ற மாற்றத்தைப் புதினங்களின் பல இடங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாக புனிதம் தேடும் புதினத்தில்,

"வரும் வழியிலேயே... அம்மா! நலமாக இருக்கிறீர்களா?, என்றதொரு குரல். திடுக்கிட்டுத் திரும்பியவள் திகைத்து நின்றாள், அவனொரு மாற்றுத் திறனாளி, தேகத்தில் ஆங்காங்கே காயங்களுடன் காண்பவர்களுக்கு அருவருப்போடு காட்சியளிக்கும் இவன், சமூகத்தால் புறக்கணிக்கப்பட்டு சந்தர்ப்பங்களால் சீர்குலைக்கப்பட்ட ஒரு யாசகன். என்னை நீங்கள் நினைவிற்கொண்டிருக்க நியாயம் இல்லை, ஆனால் உங்களை நானறிவேன். சில நாட்களுக்கு முன்னதாக ஒருவேளை உணவளித்த உயரிய குணம் கொண்டவர் நீங்கள் அதற்கு கைமாறு செய்வதற்கு நாடி வந்தேன் என்றான்" (Gowthaman Neelraj, 2020).

என்ற பதிவு திருநங்கைகள் பிறருக்கு உதவும் உயரிய குணத்தைக் காட்டுகிறது. இதன் மூலம் திருநங்கைகளும் நற்குணங்கள் தொண்ட மனிதர்கள் தான் அவர்களிடமிருந்து நாம் விலகியிருக்க வேண்டியதில்லை என்ற மாற்றத்தை எற்படுத்தும் வண்ணம் இப்பதிவுகளை நாம் கருத்தில் கொள்ளலாம்.

## மாற்றம் தந்த திருநங்கைகள்

இன்று திருநங்கைகளில் பலர் பல்வேறு துறைகளிலும் சாதித்துள்ளனர். அவர்களைப் பற்றி அறிதலும் அவசியம். ஏனென்றால் அவர்கள்தான் மாற்றுச் சமுதாயத்திற்கான முதல்படி, முன்னுதாரணம், முன்மாதிரி, வழிகாட்டி என அவர்களை மதிக்கலாம். அவர்களுள் சிலரை இங்கு அட்டவணை படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 1. பல்வேறு துறைகளில் சாதித்த திருநங்கைகள்

| மாற்றம் தந்த திருநங்கைகள் | பணிகள் |
|---|---|
| கல்கி சுப்பிரமணியம் | எழுத்தாளர், சமூகச் செயற்பாட்டாளர். |
| நர்த்தகி நடராஜ் | பரதநாட்டிய கலைஞர். |
| அக்கை பத்மசாலி | இந்தியாவில் கௌரவ டாக்டர் பட்டம் பெற்ற முதல் திருநங்கை |
| சத்யஶ்ரீ சர்மிளா | வழக்கறிஞர். |
| பிரித்திகா யாஷினி | காவல்துறை உதவி ஆய்வாளர். |
| ரோஸ் வெங்கடேசன் | தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர். |
| பிரியாபாபு | எழுத்தாளர் |
| அஞ்சலி லாமா | மாடலிங் துறையில் கால் பதித்தவர் |
| அர்ச்சனா | அழகுக் கலை பயிற்சி அளிப்பவர். |
| நஸ்ரியா | ராமநாதபுரம் மாவட்டம் முதல் திருநங்கை காவலர். |
| காஜல் | அழகு நிலையம் நடத்துபவர். |
| ஸ்வப்னா | முதல் முறையாக பதிவுத் துறையில் உதவியாளராகப் பணிபுரியும் வாய்ப்பு பெற்றவர். |

| | |
|---|---|
| ஜெயா | தமிழகத்தின் முதல் திருநங்கை சத்துணவு அமைப்பாளர் |
| ஆராதனா | இராணுவப் பயிற்சிக்கு விண்ணப்பித்து உடல்தகுதித் தேர்வில் தேர்வு பெற்று எழுத்து தேர்வுக்குக் காத்துக்கொண்டிருப்பவர். |

என இன்னும் பல்வேறு துறைகளில் சாதித்த திருநங்கைகள் நம் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். என்னதான் இலக்கியங்கள் திருநங்கைகளுக்கான சமூக மாற்றுப் பார்வையை முன்வைத்தாலும் இன்றையச் சூழலில் நம் அனைவர் கவனத்தையும் ஈர்ப்பது வெகுஜன ஊடகமான தொலைக்காட்சியும், சினிமாவும் தான். ஆரம்ப காலம் முதலே திருநங்கைகளை நகைச்சுவைக்கும், கவர்ச்சிக்காகவும் பயன்படுத்திய திரைத்துறையும் இனியேனும் அவர்களின் சமூக மாற்றத்தைக் கருத்தில் கொண்டால் திருநங்கைகள் சமூகம் அவர்களுக்கானச் சமுதாயத்தில் இருப்பதாக நிம்மதி கொள்வர்.

## முடிவுரை

திருநங்கைகளைப் பற்றி எழுதி அவர்களைப் படைப்புகளில் முதன்மைக் கதாப்பாத்திரங்களாகக் கொண்டுவந்து அவர்களுடைய வாழ்க்கை நிலையை, அவர்கள் அனுபவித்த துயரங்களளோடு சித்திரித்த சு.சமுத்திரம் அவர்கள் புதின இலக்கியத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளார். அம்மாற்றத்தின் வழி இன்று பலர் பல்வேறு இலக்கிய வடிவங்களில் திருநங்கைகளின் வாழ்நிலைகளை, உணர்வு நிலைகளைப் பதிவு செய்து வருகின்றனர். அப்பதிவுகளின் வழி இத்தகு மக்களின் சமூக வாழ்விற்கு ஏற்றம் தரும் பல மாற்றங்களைப் பதிவுச் செய்யின் அவை நாளடைவில் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படும். புதின இலக்கியத்தின் வழி திருநங்கைகளுக்கான சமூக மாற்றமாக பெற்றோர்களால், குடும்ப உறுப்பினர்களால், சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவது, கல்வியை இடைவிடாமல் தொடர்வது, வேலை வாய்ப்புப் பெறுவது, காவல்துறையின் உதவி கிடைப்பது, சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் பங்கு கொள்வது என ஒவ்வொரு நிலையிலும் மாற்றம் பெற வேண்டியே பதிவு செய்யப்பட்டுள்ளன. அப்பதிவுகள் அனைத்தும் செயல்படும் சமூகத்திலும் எவரேனும் ஒருவருக்கு என்றில்லாமல் அனைத்து திருநங்கைகளுக்குமான மாற்று சமூகமாக அமையின் மக்கள் சமூகம் சிறக்கும்.

## References

Gowthaman Neelraj, (2020) Punitham Thedum Puthinam, International Institute of Tamil Studies, Chennai, India.

Priya Babu, (2008) Munram Palin Mugam, Sandhiya Pathippakam, Chennai, India.

Samuthiram, S., (1994) Vadamalli, Vaanathi Pathippakam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License